# வண்ணாரப்பேட்டை – சென்ட்ரல் இடையே ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் சோதனை

சென்னை, ஜன. 20–

வண்ணாரப்பேட்டை – சென்ட்ரல் இடையே, ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், நேற்று, டிராலியில் சென்று சோதனை நடத்தினார்.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும், விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, 10 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை பணி முடிந்து, மெட்ரோ அதிகாரிகளால், ரயில் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு வந்தது.

இப்பாதையில், ரயில்வே பாதுகாப்பு கமிஷனர் மனோகரன், நேற்று சோதனையை துவக்கினார். நாளை வரை, தொடர்ந்து மூன்று நாட்களுக்கு, அவர் சோதனை நடத்துகிறார்.



விரைவில் பயன்பாட்டிற்கு வர உள்ள, வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம்.

முதல் நாளான நேற்று, வண்ணாரப்பேட்டையில் இருந்து, சென்ட்ரல் ரயில் நிலையம் வரை, டிராலியில் சென்று, ரயில் பாதை, வழியில் உள்ள நிலையங்களில் உள்ள வசதிகள் குறித்து, மனோகரன் சோதனை நடத்தினார்.

இன்று, சென்ட்ரல் – டி.எம்.எஸ்., இடையே, டிராலியில் சென்று சோதனை நடத்துகிறார். நாளை அதிகாலை, 12:01 மணிக்கு, வண்ணாரப்பேட்டை – டி.எம்.எஸ்., இடையே, 80 கி.மீ., வேகத்தில், விரைவு ரயில் இயக்கி சோதனை நடத்துகிறார்.

ரயில் சோதனை ஓட்டம் குறித்து, மனோகரன் கூறுகையில், ''வண்ணாரப்பேட்டை – டி.எம்.எஸ்., இடையே, சோதனை ஓட்டம் நடந்து வருகிறது.

''என்னுடைய ஆய்வு பணிகள் முடிந்து, நான் பாதுகாப்பு சான்றிதழ் கொடுத்ததும், பயணியர் ரயில் போக்குவரத்து துவக்கப்படும்,'' என்றார்.